செ.வெ.எண்: 720/2016 நாள்: 14.10.2016

**கேபிள் டிவி மூலம் செயல்பட்டு வரும் அரசு இ-சேவை மையங்களை பொதுமக்கள் அணுகி, ரூ.25/- செலுத்தி, வண்ண வாக்காளர் அடையாள அட்டை பெற்றுக்கொள்ளலாம். கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

தமிழ்நாடு அரசு கேபிள்டிவி நிறுவனத்தின் வாயிலாக தலைமைச் செயலகம், அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், சென்னை மாநகராட்சி தலைமையிடம், அனைத்து மண்டல, பகுதி மற்றும் கோட்ட அலுவலகங்கள் மற்றும் சென்னை, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய மண்டல பாஸ்போர்ட் அலுவலகங்கள் என மொத்தம் 486 இடங்களில் அரசு இ-சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இ-சேவை மைங்கள் வாயிலாக தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசின் பல்வேறு சேவைகளை பொதுமக்கள் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளும் வகையில் தேவையான வசதிகள் செய்யப்பட்டு பெருமளவு பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தற்பொழுது முதற்கட்டமாக தலைமைச் செயலகம், அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், சென்னை மாநகராட்சி தலைமையிடம் மற்றும் அனைத்து மண்டல அலுவலகங்கள் என 302 அரசு இ-சேவை மையங்களில் ரூ.25/- (ரூபாய் இருபத்தைந்து மட்டும்) செலுத்தி வண்ண வாக்காளர் அடையாள அட்டை பெற்றுக்கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 4 வட்டாட்சியர் (அகஸ்தீஸ்வரம், தோவாளை, விளவங்கோடு, கல்குளம்) அலுவலக வளாகத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு அரசின் கேபிள் டிவி இ-சேவை மையத்தினை பொதுமக்கள் அணுகி, தங்களது வாக்காளர் அடையாள அட்டை எண்ணை தெரியப்படுத்தி, வண்ண வாக்காளர் அடையாள அட்டையை பெற்றுக்கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.